செ.வெ.எண்.580 நாள்:09.07.2010

**செய்தி**

**சென்னை தலைமைச் செயலகத்தில்**
**மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்**
**திரு. கோ. சி. மணி அவர்கள் தலைமையில்**
**கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வு கூட்டம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைக்கேற்ப இன்று (9–7–2010) மாலை 4.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கோ. சி. மணி அவர்கள் தலைமையில் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறை மானியகோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் செயலாக்கம் மற்றும் கூட்டுறவுத்துறை பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், கொப்பரையை தேங்காயாக மாற்றும் அலகு அமைப்பது, கூட்டுறவு மருந்தகங்கள் மற்றும் குளிர் பதன கிட்டங்கி அமைப்பது குறித்து ஆய்வு செய்ததுடன் டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் மற்றும் உர விநியோகம் தங்குதடையின்றி வழங்கவேண்டுமென அறிவுறுத்தினார்.

அப்போது நடப்பு நிதியாண்டில் ரூ.2500 கோடி பயிர்க்கடன் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் 30.6.2010 வரை 1,54,516 விவசாயிகளுக்கு ரூ.426.41 கோடி பயிர்க்கடனும் ரூ.104.56 கோடி அளவிற்கு உர விநியோகமும் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஸ்வரன் சிங், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.ந.அசோகன், திரு.எல்.சித்திரசேனன், திருமதி வே.அமுதவல்லி, திரு. அ.சங்கரலிங்கம், திரு.கே.பி.பி.பன்னீர்செல்வம், திரு.ம.தர்மலிங்கம் திரு.இரா.ஜெயராம், திரு.க.மா.தமிழரசன், திரு. இரா.ராஜேந்திரன் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

9/7/10
PRO TO Hon'ble Minister Co-op.